Crl.Misc.39

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : DVC.No.5/2024**
**Preliminary Register :**
**Police Station :**

**Deposition of witness for :**
**:**

**Name :** ரூனா
**:** க/பெ.சிவசங்கர்

**:**
**Village :**
**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025.**

**(**எதிர் மனுதாரர் ஆஜர் **,** எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:**

1. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஐந்து ஆவணங்களும் நகல் தான் என்னிடம் உள்ளது, அதன் அசல் இல்லை என்றால் சரிதான்.

நகைகளுக்கு உண்டான ரசீதுகள் அசல் என்னிடம் உள்ளது. சி.எஸ்.ஆர் வேறு வழக்கில் தாக்கல் செய்ததால் அதன் அசல் என்னிடம் இருக்கா என்று தெரியவில்லை. எனது கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்பும் நான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பும் நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ்வதற்கு அறிவுறுத்தியதன் பேரில் அப்பொழுது நடந்த சம்பவத்தை தான் என்னுடைய பிரமாணம் ஆகும் காலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் சேர்ந்து வாழ்ந்த சமயத்தில் ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அதற்கு முன்பு தாக்கல் செய்திருந்தேன். எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் குறிப்பிட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கு உண்டான சி.எஸ்.ஆர்-ஐ இவ் வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் நான் தாக்கல் செய்து உள்ளேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சிமளித்துள்ளார். 08.09.2023 அன்று விபத்து பதிவேடு வாங்கியதாக குறிப்பிட்டுள்ளது புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் நீலாங்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் நீலாங்கரை காவல் நிலையத்திற்கு அனுப்பினர். மருத்துவமனைக்கு சென்ற பின்பு தான் புகார் கொடுத்தேன்.

3. ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த பொழுது அங்கே என்னை கேட்ட பொழுது எனது கணவர் தாக்கியதாக கூறினேன். அங்கு போலீசும் இருந்தனர். அதன் பின்பு இரண்டு நாட்களில் நீலாங்கரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். இந்த சம்பவத்திற்கு எனது கணவர் என் மீதும் எனது குடும்பத்தார் மீதும் புகார் கொடுத்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாருக்கு

காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தனர். கொடுத்த புகாருக்கு எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை என்றால் தற்போது வரை விசாரணையில் தான் உள்ளது.

4. நான் புகார் கொடுத்த போலீசார் தற்பொழுது பணியில் இல்லை. இந்த புகாருக்கு சி.எஸ்.ஆர் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். புகாரின் நகல் என்னிடம் உள்ளது. புகாரை இரண்டு நாட்கள் கால தாமதமாக கொடுத்தேன் என்றால் நான் மீண்டும் வந்த பின்பு புகார் கொடுத்தேன். அதை கால தாமதம் என்று குறிப்பிட முடியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மனுதாரர் தரப்பு சான்றாவனம் 16 நான் கொடுத்த புகார் என்றால் சரிதான். இந்த புகாரில் எனது கணவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் உள்ளதால் நான் பிரிந்து வாழ்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த காரணத்தை வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலோ, இந்த வழக்கிலோ, மற்றும் ஜீவனாம்சம் வழக்கிலோ குறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

5. நான் சொல்வது போல் இந்த காரணத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மனுதாரர் தரப்பு சான்றாவனம்17 ஆன நகைகுண்டான ரசீதுகள் எதுவும் எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். அனைத்து நகைகளும் எனது பெற்றோர்கள் மற்றும் எனது சகோதரர்கள் பேரில் வாங்கியதுதான். 2022 முன்பு வாங்கப்பட்ட நகைகள் என்றால் சரிதான். என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் நான் தாக்கல் செய்துள்ள வீடியோக்கள் எவ்வளவு நேரம் மற்றும் எங்கிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது போன்ற விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் அவரிடம் இருந்து விவாகரத்து பெற வழக்குக்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

6. மனுதாரர் தரப்பு சான்றாவணம் 19 நளினி என்னிடம் ஒரு நகலை கொடுத்தார். இந்த ஆவணத்தை எழுதிய நளினியை சாட்சியாக சேர்க்காமல் நானாக இந்த ஆவணத்தை தயாரித்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நளினி படித்துள்ளார் என்று எனக்கு தெரியும் ஆனால் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நளினி பத்தாம் வகுப்பு வரை தான் படித்துள்ளார். இதுபோல் அவருக்கு ஆங்கிலத்தை கோர்வையாக எழுத தெரியாதுளள என்றாலும் இவை நான் போலியாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

7. நான் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 15 முதல் 19 வரை நான் போலியாக தயார் செய்த ஆவணம் என்பதால் தான் அதன் அசல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் அதற்குரிய சாட்சிகளை இந்த நீதிமன்றத்தில் நான் நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரர் இடம் இருந்து விவாகரத்து பெற அதனால் தான் நான் பொய்யான இந்த ஆவணங்களை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதிமன்றம்,
சோழிங்கநல்லூர்.